



திருச்சி மாவட்டம் பச்சைமலையில் உள்ள தென்புறநாடு ஊராட்சியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியின் போது, கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் வீடுகள் – கறவை மாடுகள் – வீட்டு மனைப் பட்டாக்கள் – பேருந்து சேவைகள் – மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான வங்கி கடன் இணைப்புகள் என 1900 பயனாளிகளுக்கு ரூ.6.60 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, உழவர் சந்தை, பச்சை மலையை ஊராட்சி ஒன்றியம் ஆக்குவது, மலை கிராமங்களுக்கு இடையே சாலை மேம்பாடு , அரசு கல்லூரி மற்றும் பல்வேறு அடிப்படை கட்டமைப்புகள் சார்ந்த கோரிக்கைகளை மலை கிராம மக்கள் முன்வைத்தனர். அவற்றின் அடிப்படையில், ரூ.14 லட்சம் மதிப்பில் அங்கன்வாடி கட்டிடம், 3 லட்சம் ரூபாய் மதிப்பில் விவசாயத்துக்கு தேவையான குடிநீர் திட்ட வசதிகள் உள்ளிட்ட வசதிகளை வழங்குவதற்கு உடனடியாக ஆணையிடப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தார். இதில் அமைச்சர்கள் கே.என்.நேரு, சா.சி.சிவசங்கர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அருண் நேரு எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### இலங்கைக் கடற்படையின் படகு மோதி விபத்து!

# உயிரிழந்த மீனவர் குடும்பத்திற்கு ரூ.10 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக. 3 -

இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப்படகு மோதியதில் உயிரிழந்த இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மூக்கையா (வயது 54), முத்துமுனியாண்டி (வயது 57), மலைச்சாமி (வயது 59) மற்றும் இராமச்சந்திரன் (வயது 64) ஆகிய நால்வரும் நேற்று முன்தினம் (01.08.2024) அதிகாலை இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து விசைப்படகில் சென்று நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப்படகு மோதியதில், மீன்பிடி விசைப்படகு சேதமடைந்து நீரில் மூழ்கியதில் மலைச்சாமி (வயது 59) என்பவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், அந்த விசைப்படகில் சென்ற இரண்டு மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் அழைத்துச் சென்றதாகத் தெரியவருகிறது. மேலும், மற்றொரு மீனவர் தேடப்பட்டு வருகிறார். தமிழ்நாடு அரசு தொடர்ந்து பலமுறை கடிதம் மூலமாகவும், நேரிலும் ஒன்றிய அரசை வலியுறுத்தியும் உரிய தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதும் இதுபோன்ற விலைமதிப்பில்லா உயிரிழப்புகளும் நேர்கின்றது. இச்சம்ப வத்தை ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு அரசு தக்க முறையில் எடுத்துச் செல்லும்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த மலைச்சாமி அவர்களின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவருடைய குடும்பத்தினருக்கு பத்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

### காரைக்குடியில் முன்னாள் மாணவர்கள் சார்பில்

# ரூ. 1.50 கோடியில் வள்ளல் அழகப்பர் வெண்கலச் சிலை!

## அமைச்சர். அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் முன்னிலை!

சிவகங்கை. ஆக. 3-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி பொன்நகரில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக நிறுவனரும் வள்ளலுமான டாக்டர் அழகப்ப செட்டியார் வெண்கலச்சிலை முன்னாள் மாணவர்கள் சார்பில் ரூபாய் 1.50 கோடியில் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த சிலை திறப்பு விழா பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் க.ரவி தலைமையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் முன்னிலையில் நடைபெற்றது. பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வள்ளல் அழகப்ப செட்டியாரின் மார்பளவு வெண்கலச் சிலையை திறந்து வைத்து புகழாரம் சூட்டினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித், எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. காரைக்குடி நகர்மன்றத் தலைவர் சே.முத்துதுரை, துணைத்தலை வர் என். குணசேகரன், மாவட்ட கவுன்சிலர் நாகனி செந்தில் குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் சுப. சின்னத்துரை, கே. ஆர். ஆனந்த் நிர்வாகிகள் சொ. கண்ணன், சேவியர், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் ருக்மா சரவணன், சன் சீமான் சுப்பையா, சிதம்பரம் உட்பட பல்கலைக்கழக பேராசிரியர்கள் மாணவர்கள் மாணவிகள் கலந்து கொண்டார்கள். அதைத்தொடர்ந்து காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில்நடைபேற்ற மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசியதாவது.

முதல்வர் உத்தரவின்படி கல்லணையில் இருந்து நேற்று முன்தினம் காவிரி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் டெல்டா மாவட்டங்களில் 8 லட்சம் விவசாயிகள் பயன்பெறுவார் கள். வள்ளல் அழகப்பரின் சிலையை திறந்து வைத்ததில் பெருமை அடைகிறேன். அவர் இப்பகுதியில் கல்விக்கூடங். களை உருவாக்கியது மிகவும் பாராட்டுக்குரியதாகும். மாணவ -மாணவிகள் கல்வியில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு எது தடையாக இருந்தாலும் தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். முதல்வர் உங்களை தந்தை போல் நடத்துகிறார்.

முதலில் உங்களது பெற்றோர்கள் சொல்வதை கேட்டு நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். இரண்டாம் பெற்றோர்களான ஆசிரியர்கள் சொல்வதைக் கேட்டு ஒழுக்கத்துடன் கல்வி பயில வேண்டும். பள்ளியில் மதிப்பெண் எடுத்தால் மட்டும் போதாது. ஒழுக்கம் அவசியமாகும். எனவே நல்ல மாணவர்கள் என்ற பெயரினை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசினார்.

முன்னதாக பள்ளி தலைமை ஆசிரியர் ராஜ பாண்டியன் வரவேற்றுப் பேசினார். தொடர்ந்து அமைச்சர்கள் கேஆர்.பெரியகருப்பன். அன்பில் மகேஷ்பொய்யா மொழி ஆகியோர் அழகப்பா பல்கலைக்கழகம் சார்பில் நடைபெற்று. வரும் பள்ளியை பார்வையிட்டு அம்மாணவர்களால் உருவாக்கப்பட்ட பரிசோதனைகளை பார்வையிட்டு பாராட்டினார்கள்.

### 2021 - ஆம் ஆண்டு முதலான 10 ஆண்டு கணக்கெடுப்புடன்

# சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒருங்கிணைப்பீர்!

## மக்களவையில் வேலூர் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக. 3 -

நாடு தழுவிய அளவில் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தவும், அதை பத்தாண்டு மக்கட் தொகை கணக்கெடுப்புடன் ஒருங்கிணைக்கவும் நாடாளுமன்ற மக்களவையில் விதி எண் 377 கீழ் திமுகவின் வேலூர் மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் ஒன்றிய அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

மக்களவையில் அவர் பேசியது வருமாறு:

மக்கள்தொகைக் கணக்கெடுப்புத் தரவு எப்போதும் நமது நாட்டில் திட்டங்கள் கொள்கை உருவாக்கம் மற்றும் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான இலக்கு தலையீடுகளின் அடித்தளமாக இருந்து வருகிறது.

இந்திய சமூகத்தில் சமூக முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை நிர்ணயிப்பதில் சாதி வாரியாக கணக்கீடு செய்வது வரலாற்று ரீதியாக இருப்பதால், அது பற்றிய உண்மைத் தரவுகள் பொதுக் களத்தில் கண்டறிய வேண்டியது அவசியம்.

கடந்த ஒன்பது தசாப்தங்களில் நாட்டின் மக்கள்தொகை மற்றும் சமூக பொருளாதார நிலப்பரப்பு மாறியிருந்தாலும், சமூகத்தின் மிகவும் பின்தங்கிய பிரிவினர், பின்தங்கிய பிரிவினர், பல கடந்த கால கொள்கை நடவடிக்கைகள் இருந்தபோதிலும் தொடர்ந்து பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

இவ்வாறு அவர் பேசினார்.



இராமேஸ்வரம் மீனவர் மலைச்சாமி ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் பொழுது ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்ததையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.10,00,000/ (பத்து இலட்சம்) நிவாரண உதவித்தொகை வழங்க உத்தரவிட்டதையொட்டி மாவட்ட மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜித் சிங் காலோன், பாதிக்கப்பட்ட குடும்பத்தினரிடம் நிவாரண உதவித்தொகைக்கான காசோலையினை வழங்கி ஆறுதல் தெரிவித்தார்கள்.உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ்,ராமேஸ்வரம் நகர் மன்ற தலைவர் நாசர் கான் ஆகியோர் இருந்தனர்.

### தென்காசியில் -மாணவ, மாணவியர்

# 11,739 பேருக்கு விலையில்லா மிதிவண்டிகள் - 383 பேருக்கு புதிய வீடு கட்டுவதற்கு பணி ஆணைகள்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வழங்கினார்!

தென்காசி, ஆக.3-

தென்காசி மாவட்டம் தென்காசி இ.சி. ஈஸ்வரன் பிள்ளை அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் மாணவ,மாணவியர்கள் உட்பட 11,739 பேர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளையும்,கலைஞர் அவர்களின் கனவு திட்டத்தின் கீழ் 383 பயனாளிகளுக்கு புதிய வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளையும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் வழங்கினார்.

தென்காசி இ.சி.ஈஸ்வரன் பிள்ளை அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்வும், கலைஞர் அவர்களின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 383 பயனாளிகளுக்கு புதிய வீடு கட்டுவதற்கான பணி ஆணைகள் வழங்கும் நிகழ்வும்

மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பழனி நாடார் எம்.எல்.ஏ. சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ.ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று மாணவர், மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கியும்,கலைஞர் அவர்களின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 383 பயனாளிகளுக்கு புதிய வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளை வழங்கியும் பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்கள் பல்வேறு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.அதன் ஒரு பகுதியாக தென்காசி மாவட்ட பள்ளிக்கல்வித் துறையின் சார்பாக 50 மாணவ- மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கப்படுகிறது.ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பாக கலைஞர் அவர்களின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 2024-2025 ஆம் ஆண்டிற்கு ஊரகப் பகுதிகளில் உள்ள பயனாளிகளுக்கு தலா ஒரு வீட்டிற்கு ரூ. 3.50 இலட்சம் வீதம் 360 சதுர அடியில் வீடு மற்றும் கழிப்பறை கட்டுவதற்கு பணி ஆணை வழங்கப்படுகிறது. தென்காசி மாவட்டத்தில் இத்திட்டமானது மொத்தமாக 383 பயனாளிகளுக்கு ரூபாய் 1340 இலட்சம் மதிப்பீட்டில் 2024-2025 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் வறிய நிலையில் உள்ள கூரை வீடுகளில் வசிப்பவர்கள், நிலையான சுவர் இல்லாத வீடுகளில் வசிப்பவர்கள் மற்றும் வீடற்றவர்கள் பயனடைவார்கள். தென்காசி மாவட்டத்தில் 53 அரசு மேல்நிலைப்பள்ளிகள் 41 அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள் ஆக மொத்தம் 94 மேல்நிலைப் பள்ளிகளில் நடப்பு கல்வி ஆண்டில் 2024-2025 ஆம் ஆண்டில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் 4201மாணவர்களுக்கும்,5081 மாணவிகளுக்கும்,ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் 986 மாணவர்களுக்கும்,1351 மாணவிகளுக்கும்,பள்ளிக் கல்வித் துறையின் கீழ் 54 மாணவர்களுக்கும், 66 மாணவிகளுக்கும் என மொத்தம் 11, 739 மீதி வண்டிகளும் என தலா ஒரு மாணவனுக்கு ரூபாய்.4900 வீதம் 5241 மாணவர்களுக்கு ரூபாய்.2,56,80,980 மதிப்பீட்டிலும்,தலா ஒரு மாணவிக்கு ரூபாய் 4760 வீதம் 6498 மாணவிகளுக்கு ரூபாய் 3,09,30,480 மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூபாய் 5,66,11,380 மதிப்பீட்டிலான மிதி வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ,உதவித் திட்ட அலுவலர் (உட்கட்டமைப்பு) கண்ணன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ)தேவிகா ராணி,மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) கண்ணன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் தமிழ்ச்செல்வி போஸ், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் உதயகிருஷ்ணன்,தென்காசி நகர் மன்ற தலைவர் ஆர். சாதிர்,நகர்மன்ற துணை தலைவர் கே.என்.எல்.சுப்பையா, தென்காசி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா, ஒன்றிய குழு துணைத்தலைவர் கனகராஜ் முத்துப்பாண்டியன்,மாவட்டத் துணை செயலாளர்கள் கனிமொழி, கென்னடி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்லதுரை,முத்துப்பாண்டி,ஷேக் தாவுது, ஆறுமுகச்சாமி,பொதுக்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள் சாமிதுரை, ரஹீம், தமிழ்ச்செல்வி, ராஜேஸ்வரன், ஒன்றியச் செயலாளர்கள் அழகு சுந்தரம், சீனித்துரை, திவான் ஒலி,ரவிசங்கர், ஜெயக்குமார், மகேஷ் மாயவன், சுரேஷ், அன்பழகன்,லாலா சங்கரபாண்டியன், பெரியதுரை, வெள்ளத்துரை,நகர செயலாளர்கள் கணேசன்,அப்பாஸ்,

அந்தோணிசாமி,பிரகாஷ்,பேரூர் செயலாளர்கள் சுடலை,குட்டி, முத்தையா, மாவட்ட அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, கோமதிநாயகம்,இஞ்சி இஸ்மாயில்,இசக்கிபாண்டியன், வீராணம் சேக்முகமது,கருப்பணன்,

ரமேஷ்,வளனரசு,உதயகுமார்,திவ்யா மணிகண்டன்,ஒன்றிய குழு துணை தலைவர் ஐவேந்திரன் தினேஷ், ராமதுரை,பால்ராஜ்,சேக்பரீத்,ராமராஜ்


உள்பட கழகத்தினர்,உள்ளாட்சி பிரதிநிதிகள்,அரசு அலுவலர்கள்,

ஆசிரியர்,ஆசிரியைகள், மாணவ,மாணவியர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சைதை கா. கிட்டு

### ஆகஸ்ட் 3 (2011)



இளம்வயதிலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு, சைதை தொகுதி 139வது வட்டத்தில் சார்புமன்ற செயலாளராகப் பொறுப்பேற்று, பின்னர் படிப்படியாக வட்டப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், பகுதிக் கழகப் பொறுப்பாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புக்களை வகித்ததோடு, 1991 முதல் 2003ஆம் ஆண்டு வரை தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

1996ல் சைதை சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, சிறப்பாக பணியாற்றி அத்தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் 'சைதை கிட்டு – செயலில் சிட்டு' என்று பாராட்டப்பட்டதோடு, "சைதைத் தொகுதியில் நான் நிற்க வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்களால் கட்டளையிடப்பட்டபோது, இங்கே நான் நிற்கிறேனா – சைதை கிட்டு நிற்கிறாரா என்ற சந்தேகம் ஏற்படும் அளவுக்கு அரும்பணியாற்றியவர் தம்பி கிட்டு" என தலைவர் கலைஞர் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.